**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**
**<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>**
**<u>முதன்மை சார்பு நீதிபதி</u>**

ம.சா. 2 தேதி.13.06.2024

| | | | |
|---|---|---|---|
| MCOP. No. | 57/2022 | | |
| பெயர் | டாக்டர். ஸ்ரீதர் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் ஜி.வி மருத்துவ மனையில் எலும்பு சிகிச்சை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 25/07/2023 அன்று அன்புசெல்வன், 41 வயது என்பரை பரிசோதித்தும் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்து மனையில் 23/12/2021 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தொடை மற்றும் முட்டிக்கு கீழான காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இரண்டு இடங்களிலும் ராடு மற்றும் ஸ்குரு பொருத்தப்பட்டுள்ளது. கால் மற்றும் தொடை வலியிருப்பதாக என்னிடம் வந்தார் அவருக்கு எக்ஸ்ரே எடுத்து பரிசோதனை செய்து பார்த்த பின் அவருக்கு காலில் உள்ள எலும்பு நன்கு கூடிய நிலையில் உள்ளது எனவே, ராடு மற்றும் ஸ்குருவினை அகற்றிட நான் பரிந்துரை செய்தேன். அதற்கு சுமார் 70 ஆயிரம் வரை செலவாகும். அதற்கு நான் சான்று வழங்கினேன். மனுதாரரின் எக்ஸ்ரே மற்றும் நான் வழங்கிய சான்று ம.சா.ஆ.13, 14 ஆகும்.

<u>3ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் எக்ஸ்ரே எடுத்து பார்த்தில் இரண்டு எலும்பு முறிவும் சேர்ந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தில் தொற்றுகள் எதுவும் இல்லை. தொற்றுகள் இல்லாத நிலையில் ராடு மற்றும் ஸ்குருவை எடுக்க வேண்டியது அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வலி இல்லாத நிலையில் ராடு மற்றும் ஸ்குருவை எடுக்க வேண்டிய நிலை இல்லை என்றால் சரிதான். மனுதாருக்கு வலி எதுவும் இல்லாமல் அதிக இழப்பீடு பெறுவதற்கு என்னை அனுகி இந்த சான்றினை பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. ஏற்படும் செலவினை அதிகமாக கூறியுள்ளளேன் என்றால் சரியல்ல. இலவசமாக இந்த சிகிச்சையை அரசு மருத்துவ மனையில் செய்து கொள்ளலாம் என்றால் சரிதான்.

2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.